## திருப்பத்தூர் நகராட்சி

2020–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10–ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.15 மணிக்கு திருப்பத்தூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் இயல்புக் கூட்ட நடவடிக்கைகள்

நகராட்சி அலுவலகம் — தனி அலுவலர் (ம) ஆணையாளர்(பொ)
திருப்பத்தூர் — திருப்பத்தூர் நகராட்சி.
நாள்.10.07.2020

### பொருட்கள்

119) நகராட்சி பொது நிதி மற்றும் குடிநீர் நிதி 2020–2021–ம் நிதியாண்டின் கீழ் பணிகள் செய்ய 24.06.2020–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | நகர மன்ற தீர்மானம் எண் & நாள் | ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 32 ஆரிப் நகரில் குடிநீர் பைப் லைன் அமைத்தல் பணி | 9.75 | 93/30.06.2020 | 1. திரு. எ.சி. சுரேஷ்குமர் , மதிப்பீட்டை விட குறைவு (0.18%)<br>2. திரு. என். பூபதி , மதிப்பீட்டை விட அதிகம் (1.04%) |
| 2 | கோவிட் 19– புதிய பேருந்து நிலையத்தில் Stand and Wash Basin அமைத்தல் பணி | 1.40 | 94/30.06.2020 | 1. திரு.கே.ராஜா, மதிப்பீட்டை விட குறைவு (0.23%)<br>2. திரு. என். பூபதி , மதிப்பீட்டை விட அதிகம் (1.70%) |
| 3 | நவீன எரிவாயு தகன மேடை சுற்றி பராமரிப்பு பணிகள் | 1.70 | 95/30.06.2020 | 1. M/S எஸ்.ஜி.எஸ் சர்வீஸ், சென்னை, மதிப்பீட்டை விட குறைவு (0.21%)<br>2. திரு. என். பூபதி , மதிப்பீட்டை விட அதிகம் (1.39%) |

பணி 1– வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் திரு. எ.சி. சுரேஷ்குமர் , என்பவர் மதிப்பீட்டை

விட குறைவான (0.18%) சதவீதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். எனவே மன்றத்தின் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கலாம்.

பணி 2 – வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் திரு. திரு.கே.ராஜா , என்பவர் மதிப்பீட்டை

விட குறைவான (0.23%) சதவீதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். எனவே மன்றத்தின் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கலாம்.

பணி 3– வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில். M/S எஸ்.ஜி.எஸ் சர்வீஸ், என்பவர் மதிப்பீட்டை விட குறைவான (0.21% )சதவீதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். எனவே மன்றத்தின் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கலாம்.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. பணி 1, 2 மற்றும் 3 குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்காலம்.

ந.க.எண்621/2020/இ1

120) இந்நகராட்சி வார்டு எண்.27 (காமராஜர் நகர்) முத்தமிழ்நகரில் புதிய குடிநீர் இணைப்பு பெற பொதுமக்கள் முன்வந்துள்ளனர் அப்பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்க தேவையான பகிர்மான குழாய் இல்லாமல் உள்ளது. எனவே, பொதுமக்களின் நலன்கருதி 90 எம்.எம். பி.வி.சி. குழாய் அமைக்கவும் அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1.00 லட்சத்திற்கும் மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

பொதுமக்களின் நலன் கருதி மேற்படி பகுதியில் குடிநீர் பணி செய்யவும், செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம். செலவினத்தை 2020–2021 நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.752 / 2020 / இ1

121) திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகள் போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சித்தலைவர், திருப்பத்தூர் அவர்களின் 22.05.2020-ம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகளில் 60 வயது அதற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கான மருத்துவ பரிசோதனை மேற்கொள்ள அறிவுறுத்தியதன்படி, இந்நகராட்சி பகுதிகளில் 60 வயது அதற்கு மேற்பட்டவர்களின் நலன் கருதி 12 இடங்களில் 23.05.2020. முதல் 06.06.2020 வரை மருத்துவ பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டது. அதனை தொடர்ந்து காலை, மாலை இரு வேலைகளிலும் மருத்துவ முகாம்கள் நடத்த மாவட்ட ஆட்சித்தலைவர், திருப்பத்தூர் அவர்கள் அறிவுறுத்தியதன்படி, இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 07.07.2020 முதல் சிறப்பு முகாம்கள் நடத்திடவும், அதில் பங்கேற்கும் மருத்துவர்கள், மருத்துவ குழுப் பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் கொண்ட குழு நபர்கள் ஆகிய 30 முதல் 40 நபர்களுக்கு உணவுகள், தண்ணீர், டீ, பிஸ்கட் உள்ளிட்ட பொருட்கள் 'வழங்கிடவும், அதற்கான தோராய செலவினத் தொகை ரூ.2.00/-இலட்சத்திற்க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

மாவட்ட ஆட்சித்தலைவர், திருப்பத்தூர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தவும், அதற்கான செலவினத்தை SDRF நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(**ந.க.எண்**.298/2020/எச்1)

122) திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகளில், கொரோனா வைரஸ் நோய் தொற்று ஏற்பட்டுள்ள பகுதிகள் முழுவதும் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டு அப்பகுதி முழுவதும் கட்டுக்குள் இருக்கும் வகையில் தற்காலிகமாக தடுப்புகள் அமைத்திட தேவையான கீழ்காணும் விவரப்படி, தகரங்கள் மற்றும் மரக்கொம்புகள் வாங்கிட சப்ளை செய்யும் பணிகளுக்கு **02.07.2020–ல்** விலைப்புள்ளி கோரப்பட்டது**.** வரப்பெற்ற கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது

| வ.எண் | சப்ளை செய்யும் பொருட்கள் விவரம் | கதிரவன் ஸ்டீல்ஸ், எண்.87, கிருஷ்ணகிரி ரோடு, திருப்பதுதூர் | ஸ்ரீ பாலாஜி ஏஜென்சிஸ், எண்.4/193, பெரிய கடை தெரு, திருப்பத்தூர். | ஸ்ரீ கதிரவன் ஏஜென்சி 33F, அட்வகேட் ராமநாதன் நகர், திருப்பதுதூர் |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| 1. | தகரம் 8X3 | ரூ.460.00 | ரூ.465.00 | ரூ.440.00 |
| 2. | தகரம் 10X3 | ரூ.610.00 | ரூ.620.00 | ரூ.590.00 |
| 3. | மரக்கொம்புகள் | ரூ.65.00 | ரூ.75.00 | ரூ .40.00 |

<u>அலுவலக குறிப்பு:-</u>

மேற்படி இரண்டு விலைப்புள்ளிகளில் ஸ்ரீ கதிரவன் ஏஜென்சி 33F, அட்வகேட் ராமநாதன் நகர், திருப்பதுதூர் என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.298/2020/எச்1)

123) திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகள் மேற்கோள்ளப்பட்டு வருகிறது. அதற்காக சோடியம் ஹைப்போ குளோரைட் கரைசல் பயன்படுத்தி தினசரி பணிகள் மேற்கோள்ளப்பட்டு வருகிறது. தொடர்ந்து கிருமி நாசினி தெளிக்கும் பணிகள் மேற்கொள்ள 20,000 லிட்டர் சோடியம் ஹைப்போ குளோரைட் சப்ளை செய்யும் பணிகளுக்கு **02.07.2020–ல்** விலைப்புள்ளி கோரப்பட்டது**.** வரப்பெற்ற கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | விலை விவரம் (ஒரு லிட்டர் விலை) ரூ | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ கிருஷ்ணா ஏஜென்சிஸ், எண்.2&3, ஜானகிராம் காலனி வில்லிவாக்கம், சென்னை-49. | ரூ.26.00 | அதிகம் |
| 2. | ஸ்ரீ வெங்கடேஷ்வரா டிரேடர்ஸ் எண்.6/1, இலண்டன் மிஷன் ரோடு, திருப்பத்தூர். | ரூ.22.00 | குறைவு |
| 3. | வீனஸ் அசோசியேட்ஸ், எண்.395/1, தெற்கு பாண்டி ரோடு, விழுப்புரம்-02. | ரூ.24.00 | அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:-</u>

மேற்படி மூன்று விலைப்புள்ளிகளில் ஸ்ரீ வெங்கடேஷ்வரா டிரேடர்ஸ், எண்.6/1, இலண்டன் மிஷன் ரோடு, திருப்பத்தூர் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.298/2020/எச்1)

124) திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகள் போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகள் மற்றும் வெளிப்புறப் பகுதிகளில் கிருமி நாசினி தெளித்தல், அப்பகுதியில் குப்பைகளை தனியே மஞ்சள் பைகள் மூலமாக பெறுதல், கொரோனா வைரஸ் நோய் தொற்று ஏற்பட்டு இறப்பவர்களின் உடலினை அரசு முறைப்படி அகற்றுதல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு தேவையான முழு உடற்கவசம் (PPE Kit -Personal Protective Equipment) குறைவான எண்ணிக்கையில் உள்ளதால், மேலும், 600 எண்ணிக்கையில் முழு உடற்கவசங்கள் விலைப்புள்ளி கோரி வாங்கிடவும், அதற்கான தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதியும், பணியாளர்களின் நலன் கருதியும் முழு உடற்கவசங்கள் வாங்கி பயன்படுத்தவும், அதற்கான செலவினத்தை SDRF நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.298/2020/எச்1)

125) திருப்பத்தூர் நகராட்சி நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2019–2020–ல் சிப்பம்–2 பணிக்கு 30.06.2020 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 07.07.2020–ம் தேதி மாலை 3.30 மணிக்கு Price bid open செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் கணக்கிட்டு கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | வேலையின் விவரம் | ஒப்பந்ததாரர் பெயர் | வரப்பெற்ற ஒப்பந்த புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | சிப்பம் எண்.II<br><br>Name of work: Providing black Top surface Road. to Chairman Lakshmanar Street Ward no 17, Chetty Street Ward no 20, Katchery Street Ward no 20, Nethaji Road Ward no 20, Advocate Rama Samiyar Street Ward no 28, Kamarajar Nagar Ward no 28. Velan Nagar Ward no 33. Siva Sakthi Nagar Ward no 35 and Valluvar Nagar Ward no 36 in Tirupattur Municipality Est Rs.250.00 Lakhs | Excel Engineering Enter Prises | 4.93% மதிப்பீட்டை விட அதிகம் |

**சிப்பம் எண்.2–**ல் M/s.Excel Engineering Enter prises ஒப்பந்ததாரர் 4.93% மதிப்பீட்டை விட அதிகம் டெண்டர் கொடுத்துள்ளார். அதனை மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு உட்பட்டு செய்து கொடுக்க (Negotiation) கடிதம் அனுப்பப்பட்டது. அதனை ஏற்று மேற்படி கட்டுமான பணிகளின் கட்டுமான பொருட்கள் அனைத்தும் வெளி மார்க்கெட்டில் அதிக விலை உள்ளதால் அதனை குறைத்துக் கொடுக்க இயலாது என தெரிவித்தார். எனவே ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ( 4.93% மதிப்பீட்டை விட அதிகம்) ஏற்று கூடுதல் வைப்பு தொகை (Additional deposit) 1% தொகை ரூ. 2,06,542/–செலுத்திய பின்னர் பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 1178/2018இ1

126) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்கண்டுள்ள இடங்களில் காற்று மழையின் காரணமாக புங்க மரம் மற்றும் வேப்ப மரம் மற்றும் இதர மரங்கள் கீழே விழுந்தன. பொது மக்களின் நலன் கருதி வன அலுவலர் அவர்கள் நிர்ணயம் செய்த தொகையின் அடிப்படையில் பொது ஏலம் நடத்தப்பட்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கப்பட்டது. எனவே மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | சாம நகர் பகுதி<br>1. புங்க மரக் கிளைகள்.<br>2. வேப்ப மரம் ஒன்று. | ஏலம் தேதி: 24.06.2020 | சர்கார் மதிப்பீடு தொகை ரூ.9727.00 | ஏல மதிப்பீடு தொகை ரூ.11000/– | பணி உத்திரவு நாள் 25.06.2020 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | 1) கௌதம் பேட்டை – மயில் கொன்றை மரம் – 2<br>2) காந்தி பேட்டை பகுதி – மயில் கொன்றை மரம் –1<br>3) கோவிலூர் சாலை – புளிய மரம் – 1<br>4) கோவிலூர் சாலை – வேப்ப மரம் – 1 | ஏலம் தேதி: 07.07.2020 | சர்கார் மதிப்பீடு தொகை ரூ.6266.00 | ஏல மதிப்பீடு தொகை ரூ.7000/– | பணி உத்திரவு நாள் 07.07.2020 |

அலுவலக குறிப்பு

1. மன்றம் பதிவு செய்யலாம்.

2. பொது மக்களின் நலன் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்357/2020/இ1

127) திருப்பத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளில் அருணை கம்ப்யூட்டர் பார்ம்ஸ், புதூர், வாணியம்பாடி நிறுவனத்தின் மூலம் 66 DBC பணியாளர்களை கொண்டு 01.09.2018 முதல் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சித்தலைவர், அவர்களின் செயல்முறை உத்தரவின் பட்டியல்படி, மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள பணி உத்தரவில் குறிப்பிட்டுள்ள ஊதிய விகிதத்தில் 66 DBC பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க ஒரு வருடத்திற்கான தோராய செலவின தொகை ரூ.80.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1791/2018/எச்1)

128) திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகள் போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்பொது கொரோனா வைரஸ் நோய் தொற்று தினசரி அதிகரித்து வருவதால், அதனை கட்டுப்படுத்தும் வகையில் தொடர்ந்து பணியினை மேற்கொள்ள தேவையான கீழ்காணும் விவரப்படி, ஸ்பிரேயர் இயந்திரங்கள் சப்ளை செய்யும் பணிகளுக்கு 03.07.2020–ல் விலைப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | சப்ளை செய்யும் இயந்திரங்கள் விவரம் | பத்மகிருத்திகா எண்டர்பிரைசஸ், 1/309A, இலாபவிநாயகர் தெரு, சாமுசிங்கபுரம், ராஜாபாளையம், | அரிஷீஸ்வரா அசோசியேட், எண்.1/28, கிழவிகுளம், ராஜாபாளையம், விருதுநகர் மாவட்டம். | S.V.P. டிரேடர்ஸ், எண்.8, மணியகாரர் தெரு, புதிய ஆயக்குடி, பழனி தாலுக்கா, திண்டுக்கல் மாவட்டம். |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **1.** | Portable Petrol Operated Power Sprayer | ரூ.20400.00 | ரூ.22000.00 | ரூ.22500.00 |
| **2.** | Mistry blower for Battery Operated Sprayer | ரூ.2400.00 | ரூ.2600.00 | ரூ.2500.00 |

<u>அலுவலக குறிப்பு:-</u>

மேற்படி மூன்று விலைப்புள்ளிகளில் அரிஷீஸ்வரா அசோசியேட், எண்.1/28, கிழவிகுளம், ராஜாபாளையம், விருதுநகர் மாவட்டம் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.298/2020/எச்1)

129) திருப்பத்தூர் நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகள் மேற்கோள்ளப்பட்டு வருகிறது. தற்போது கொரோனா வைரஸ் நோய் தொற்று அதிகமாக பரவி வருவதால், நோய் தடுப்பு குறித்த விழிப்புணர்வு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு, மருத்துவ முகாம்களுக்குரிய பேனர்கள், நோட்டீஸ்கள், கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளுக்குரிய அறிவிப்பு நோட்டீஸ்கள், பேனர்கள், சுவரொட்டிகள் பெற்று பணிகள் மேற்கொள்ள தேவையான கீழ்காணும் விவரப்படி, பேனர்கள், நோட்டீஸ்கள், ஸ்டிக்கர்ஸ் அச்சடித்து சப்ளை செய்யும் பணிகளுக்கு **03.07.2020–ல்** விலைப்புள்ளி கோரப்பட்டது**.** வரப்பெற்ற கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | அச்சடித்து சப்ளை செய்யும் பொருட்கள் விவரம் | .சுமி லேசர் டிஜிட்டல் கலர் லேப் ஸ்டுடியோ & டிஜிட்டல் பேனர்ஸ், எண்.59,60, நகராட்சி வணிக வளாகம், திருப்பத்தூர். | லவ்லி ஆப்செட் கலர் பிரிண்டர்ஸ், லவ்லி டிஜிட்டல் பேனர்ஸ், எண்,93/3, கிருஷ்ணகிரி மெயின் ரோடு, மீனாட்சி நிலையம், திருப்பத்தூர். | MNB டிஜிட்டல் பேனர்ஸ், எண்.21/135, VCM தெரு, SVM காம்ப்ளக்ஸ், திருப்பத்தூர். |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **1.** | அறிவிப்பு பேனர்கள் | **ரூ.465.00** | **ரூ.470.00** | **ரூ.450.00** |

| | | | | |
|---|---|---|---|---|
| | (மருத்துவ முகாம்கள், கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகள்) | | | |
| 2. | அறிவிப்பு நோட்டீஸ்கள் | ரூ.4.50 | ரூ.5.00 | ரூ.3.00 |
| 3. | சுவரொட்டிகள் (கலர்) | ரூ.25.00 | ரூ.23.00 | ரூ.21.00 |
| 4. | கொரோனா விழிப்புணர்வு ஸ்டிக்கர்ஸ் | ரூ.5.00 | ரூ.4.50.00 | ரூ.3.50.00 |

<u>அலுவலக குறிப்பு:-</u>

மேற்படி மூன்று விலைப்புள்ளிகளில் MNB டிஜிட்டல் பேனர்ஸ், எண்.21/135, VCM தெரு, SVM காம்ப்ளக்ஸ், திருப்பத்தூர் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.298/2020/எச்1)

130) திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகளில், கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகள் மற்றும் இதர பகுதிகளில் வீட்டு கழிவுகளை (அபாயகரமான) தனியே பாதுகாப்பாக பெறுதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு உரிய பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கிட சப்ளை செய்யும் பணிகளுக்கு **06.07.2020–ல்** விலைப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது

| வ.எண் | சப்ளை செய்யும் பொருட்கள் விவரம் | . RSA TRADERS எண்.76/12, சுண்ணாம்புகார தெரு, திருச்சிராப்பள்ளி-02. | PARISITH TRADERS எண்.3/10, கீழ தேவதனம் திருச்சிராப்பள்ளி-02. | KAMALA TRADERS எண்.2, கீழ தேவதனம் திருச்சிராப்பள்ளி-02. |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | White PPE | ரூ. 990+5%GST | ரூ.950+5%GST | ரூ. 1100+5%GST |
| 2. | PPE Colour | ரூ. 550+5%GST | ரூ.500+5%GST | ரூ. 600+5%GST |
| 3. | கையுறை (ரப்பர் (ம) காட்டன் | ரூ .140+18%GST | ரூ.120+18%GST | ரூ. 150+18%GST |
| 4. | கையுறை (ரப்பர் | ரூ. 60+18%GST | ரூ. 50+18%GST | ரூ.65+18%GST |
| 5. | கையுறை (ஒரு முறை பயன்படுத்துவது) | ரூ. 10+12%GST | ரூ. 5+12%GST | ரூ.12+12%GST |
| 6. | முக கவசம் (ஒரு முறை பயன்படுத்துவது) | ரூ. 7+5%GST | ரூ. 6+5%GST | ரூ8+5%GST |

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

மேற்படி மூன்று விலைப்புள்ளிகளில் PARISITH TRADERS எண்.3/10, கீழ தேவதனம் திருச்சிராப்பள்ளி-02 என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.298/2020/எச்1)

131) அரசாணை (நிலை) எண்-168 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரு1) துறை நாள்-16.11.2015-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணி புரிந்து வரும் தூய்மை பணியாளர்கள் மற்றும் இதர தகுதி வாய்ந்த பணியாளர்களுக்கு 2020-2021-ம் ஆண்டிற்கான சீருடைகள் மற்றும் தையற்கூலி ஆகியவற்றினை வழங்கிட அதற்கான தோராய செலவினத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்-168 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரு.1) துறை நாள்-16.11.2015-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சியில் பணி புரிந்து வரும் தகுதி வாய்ந்த தூய்மை பணியாளர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு சீருடைகள் தமிழ்நாடு அரசால் நடத்தப்படும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் கொள்முதல் செய்திடவும், தையற்கூலி ஆகியவற்றை வழங்கவும் அதற்கான தோராய செலவினத் தொகை ரூ.8.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு:-</u>

அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1884/2015/எச்1)

132) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும் பொது சுகாதார பிரிவின் மூலம் தினசரி திடக்கழிவு மேலாண்மை பணிகள் நிரந்தர மற்றும் தனியார் தூய்மை பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், நகராட்சிக்குட்பட்ட பொது கழிப்பறைகள், பள்ளிகள், வணிக வளாகங்கள், பொது மக்கள் நடமாடும் பகுதிகள், பேருந்து நிலையம், மெயின்ரோடு போன்ற முக்கிய பகுதிகளில் கழிவுகள் சேகரமாகும் பகுதிகளிலும், பொது சுகாதாரம் பேணிகாக்கும் பொருட்டு லெமன் கிராஸ் ஆயில் வாங்கி பயன்படுத்த அதற்கான தோராய செலவினம் ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

பொது சுகாதார பணியின் அவசியத்தை கருதி லெமன் கிராஸ் ஆயில் கொள்முதல் செய்து பயன்படுத்தவும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1740/2018/எச்1)

133) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.2 அனுமந்த உபாசகர் பேட்டை பொன்னு கிருஷ்ணசாமி ஐடிஐ பின்புறம் உள்ள குடியிருப்பு மற்றும் அனுமந்த உபாசகர் பேட்டை குறுக்கு தெருவில் உள்ள குடியிருப்புகளுக்கு சீரான குடிநீர் வழங்க வேண்டி குடிநீர் பகிர்மான குழாய் அமைத்திடவும் இப்பணிக்கான செலவீனம் ரூ.20000/– மதிப்பீட்டில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பணிக்கான செலவீனத்தை நகராட்சி குடிநீர் நிதி 2020–2021–ம் நிதியாண்டின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.751 / 2020 / இ1

134) நகராட்சி வார்டு எண்.32, வெங்கடேஷ்வரா நகர் தில்லை வட்டம் திருத்திமேடு பகுதியில் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க வேண்டி பொது மக்களால் கொடுக்கப்பட்ட மனு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கப்பட்ட மனுவின்படி மேற்படி இடத்தில் சிறுபாலம் ஒன்று அமைக்க அவசியமாவதால் பொதுமக்களின் நலன் கருதி சிறுபாலம் அமைக்கவும் அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.50 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

பொது நிதி 2020–2021–ன் கீழ் பணியை செய்யவும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.750/2020/இ1

135) திருப்பத்தூர் நகராட்சி நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (TURIP) 2019–2020–ல் இரண்டு எண்ணிக்கை சிப்பம் பணிக்கு 20.01.2020–ம் தேதி Price bid திறக்கப்பட்டு, சிப்பம் 2–க்கான ஒப்புநோக்கு பட்டியலில் M/S Excel Engineering Enterprises , Jolarpettai நிறுவனம் 19.14% மதிப்பீட்டினை விட குறைவாக டெண்டர் கொடுத்துள்ளார். இதற்கு கூடுதல் வைப்புத் தொகை 10% அதாவது ரூ. 25,00,000/– (ரூபாய் இருபத்தி ஐந்து இலட்சம்) செலுத்த ஒப்பந்ததாரருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. 7 தினங்களில் கூடுதல் வைப்புத்தொகை செலுத்தாத பட்சத்தில் M/S Excel Engineering Enterprises ,Jolarpettai நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளி ரத்து செய்யப்படும் என இவ்வலுவலகக் கடிதம் ந.க.எண்.1178/2018/இ1 நாள்.27.01.2020ல் தெரிவிக்கப்பட்டது. ஆனால் ஒப்பந்ததாரர் தொகை செலுத்தாத காரணத்தால் 20.02.2020–ம் தேதிய மன்ற தீர்மானம் எண் 11–ன் அடிப்படையில் இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பட்டது. எனவே ஒப்பந்தவிதிகளின் படி அன்னார் செலுத்திய வைப்புத் தொகை ரூ.2.50.000/–ஐ பறிமுதல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 1178/2018/இ1

136) திருப்பத்தூர் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வண்டி எண் TN23P8444–ல் கீழ்கண்டுள்ள பழுதுப் பணிகள் செய்ய வேண்டியுள்ளது. எனவே பணியின் அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று மதிப்பீடு தயாரிக்கப்பட்டது.

| பணியின் விவரம் | Tirupattur Agro Engineering & Service – Tirupattur . ரூ.1,18,832/– | KKN Contract Works Tirupattur. ரூ.1,20,288/– | Rajeswari Auto Mobles Asiriyar Nagar, Tirupattur . ரூ.1,21,576/– |
|---|---|---|---|
| 1. பிரண்டு வீல் பால் ஜாயிண்டுகள் 1 செட் புதியது மாற்றி கொடுக்க லேபர் உள்பட | | | |
| 2. டைராடு எண்டுகள் 8 எண் புதியது மாற்றி கொடுக்க லேபர் உள்பட | | | |
| 3. 4 வில்களுக்கும் அப்கிரிஸ் மெட்டிரியல் லேபர் உள்பட | | | |
| 4. வீல் சிலிண்டர் மற்றும் மாஸ்டர் சிலிண்டர் கிட்டுகள் மாற்றி பிரேக் ஆட்ஜெண்ட்மெண்ட் செய்து கொடுக்க லேபர் உள்பட | | | |
| 5. கிளட்ச் மாஸ்டர் சிலிண்டர் கிட் மாற்றுவதற்கு லேபர் உள்பட | | | |
| 6.செல்ப்மோட்டார் மற்றும் டைனமோ சர்வீஸ் செய்து கொடுக்க லேபர் உள்பட | | | |
| 7.என்ஜீன் ஆயில் மாற்றி சர்வீஸ் செய்துக் கொடுக்க ஆயில் பில்டர், டீசல் பில்டர் மாற்றி கொடுக்க லேபர் உள்பட | | | |
| 8.12V பேட்டரி புதியது மாற்றி கொடுக்க லேபர் உள்பட | | | |
| 9. 4 டயர் மற்றும் டியூப் மாற்றி வீல் அலைன்மெண்ட் செய்து கொடுக்க லேபர் உள்பட | | | |
| 10. 4 எண் வீல் கப் புதியதாக மாற்றிக்கொடுக்க லேபர் உள்பட | | | |
| 11. ஒயரிங் பணிகள் தேவையான பொருட்கள் வாங்கி சரிசெய்து கொடுக்க லேபர் உள்பட | | | |
| 12. கண்ணாடி மற்றும் ஸ்டிக்கர் பணிகள் செய்வதற்கு லேபர் உள்பட | | | |

மேற்படி பணிக்கு குறைந்த விலைப்புள்ளி அடிப்படையில் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1.20 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும் இப்பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி பொது நிதி 2020–2021–ம் நிதியாண்டின் கீழ் பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 757/2020/இ1

137) திருப்பத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 15 அரசு பூங்கா சாலையில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைந்துள்ள இடத்தை சுற்றி சுற்று சுவர் உயர்த்தி கட்டுதல், கேட் அமைத்தல் மற்றும் குடிநீர் கேட்வால்வு தொட்டி அமைத்தல் பணிகள் செய்திட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சியின் பொது நிதி 2020–2021–ம் நிதியாண்டின் கீழ் பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 757/2020/இ1

138) திருப்பத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும் தினசரி பொது சுகாதாரப் சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நோய் தொற்று பரவுவதை தடுக்கும் பொருட்டு, கிருமி நாசினி தெளிக்கு பணிகளுக்கு மைக்ரோபேக்டிசைட் (Microbacticide) வாங்கி பயன்படுத்தவும், அதற்கான தோராய செலவினம் ரூ.6.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு:-</u>

பொது சுகாதார பணியின் அவசியத்தை கருதி மைக்ரோபேக்டிசைட் (Microbacticide) கொள்முதல் செய்து பயன்படுத்தவும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

.(ந.க.எண்.1884/2015/எச்1)

139) உள்ளாட்சி தேர்தல் 2020 பணியில் புதிய வாக்கு சாவடிகள் அமைந்துள்ள இடத்தினையும், 71 வாக்குச்சாவடிக்கான எண்கள் திருப்பத்தூர் நகர வரைபடத்தில் குறிக்கும் வகையில் பல்வேறு வகையான கீழ்கண்டபடியான (Auto cad Drawing) கணினி மூலம் பணி செய்ய வேண்டியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | Auto cad drawing preparation polling station 71 nos Location Marked in Town Map and books Nos/1 number of voters marked in Town map A4 – size B/W print – 71 Nos x 4 set-284 nos (Combined map) Colour print A2 size. | பணி செய்தல் |
| 2 | Town Map printing charges A2. size colour print -18 nos. | பணி செய்தல் |
| 3 | Ward map -36 Nos Printing Charges A3-Size Colour print-200 | பணி செய்தல் |

மேற்படி பல்வேறு அளவில் வண்ணப்படம் Auto cad–ல் செய்து ஒப்படைக்க வரப்பெற்ற கீழ்கண்ட விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனங்களின் விவரம் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | P.Sachidanandam,<br>Annantha Builders,<br>Licensed Building Surverpor,<br>35, இராமக்கா பேட்டை,<br>திருப்பத்தூர். | 61,950.00 |
| 2 | K.மணவாளன்,<br>Gokul Builders,<br>Licensed Building Surverpor,<br>15/3, வாணியம்பாடி ரோடு,<br>திருப்பத்தூர். | 64,348.00 |
| 3 | S.Santhosan,<br>Ransan Builders,<br>38, TNHB-P-II,<br>திருப்பத்தூர். | 66,450.00 |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள P.Sachidanandam, Annantha Buildars நிறுவனத்தின் ரூ.61,950/—ஐ அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மாவட்ட ஆட்சியர் வேலூர் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் வேலூர். அவர்களின் ஆய்வுகூட்ட அறிவுரைப்படி தேர்தல் பணி சுணக்கம் இல்லாமல் பணி செய்ய மேற்படி பணிகள் அனைத்தும் செய்ய செலவினம் ரூ.61,950/— மன்றம் அனுமதிக்கலாம்.

2. குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.(1)ல் P.Sachidanandam, Annantha Builders, Licensed Building Surverpor, 35, இராமக்கா பேட்டை, திருப்பத்தூர். நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.426/2020/எப்1)

140) திருப்பத்தூர் நகராட்சி பகுதியில் உள்ளாட்சி தேர்தல் நடைபெற அனைத்து விதமான ஆயுத்தப் பணிகளும் செய்யப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் திருப்பத்தூர் நகர வரைப்படத்தில் புதியதாக உள்ள 71 வாக்கு சாவடி மையத்தை குறியீடு செய்து 5 மண்டலங்கலாக (5 Zone) பிரித்து ஒவ்வொரு மண்டலத்திற்கும் தனித்தனி வரைபடங்களாக உருவாக்கி அதில் ஒவ்வொரு வாக்கு சாவடி மையத்திற்கும் வாகனம் செல்ல காவல் துறை அறிவுருத்தலின் படி அணுகு பாதையை கோடிட்டு காட்டவும் அதே போல் 5 மண்டலங்கள் உள்ளடக்கிய வரைபடத்திலும் வாகனம் செல்லும் அணுகு சாலையை கோடிட்டு காட்டவும், கணிணி மூலம் (Auto cad) வரைபடம் தயாரிக்கவும், கலர் பிரிண்ட் எடுக்கும் பணிகள் செய்து சமர்ப்பிக்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு கீழ்கண்ட பணிகள் செய்ய வேண்டியுள்ளது.

| வ.எண். | வேலையின் விவரம் | நகல்களின் எண்ணிக்கைகள் |
|---|---|---|
| 1 | Auto cad plan preparation for Zone as apery 1 to 5 nos map preparation and location marked in town map of Tirupattur Municipality. Auto cad drawing preparation | 8 Copies |

| | | |
|---|---|---|
| | (combined map) colour print A2 size | |
| 2 | Auto cad plan preparation zone map 1to 5. location of Books indicated and mobile transportion roufe marked zone map -5 nos x 10 copies colour print – A3 size | 50 Copies |
| 3 | Auto cad plan preparation for courting center, strong Room with EVMS Arrangements | 8 Copies |

மேற்படி பல்வேறு அளவில் வண்ணப்படம் Auto cad –ல் செய்து ஒப்படைக்க வரப்பெற்ற விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனங்களின் விவரம் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | P.Sachidanandam<br>Anantha Builders<br>Licensed Building Surverpor<br>35. இராமக்கா பேட்டை<br>திருப்பத்தூர். | 36,000.00 |
| 2 | K.மணவாளன்,<br>Gokul Builders<br>Licensed Building Surverpor<br>15/3, வாணியம்பாடி ரோடு,<br>திருப்பத்தூர் | 40,000.00 |
| 3 | S.Santhosan<br>Ransan Builders.<br>38, TNHB-P-II<br>திருப்பத்தூர் | 44,000.00 |

மேற்கண்ட மூன்று நிறுவனங்களில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள் Annantha Builders நிறுவனத்தின் ரூ.36,000/–ஐ மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு:–**

1. மாவட்ட ஆட்சியர், வேலூர், மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் வேலூர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைப்படி தேர்தல் பணி சுணக்கம் இல்லாமல் பணி செய்ய மேற்படி பணிகள் அனைத்தும் செய்ய செலவினம் ரூ.36,000/–க்கு மன்றம் அனுமதிக்கலாம்.

2. குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.(1)ல் P. Sachidanandam Annantha Builders Licensed Building Surverpor, 35, இராமக்கா பேட்டை, திருப்பத்தூர், நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.426 / 2020 / எப்1)